| Headline | Re-planting program at Johor in partnership with statutory bodies | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 19 Jan 2017 | Language | Tamil |
| Circulation | 35,000 | Readership | 125,000 |
| Section | News | Page No | 3 |
| ArticleSize | 314 cm² | Journalist | NULL |
| PR Value | RM 4,796 | | |
| | | | |



# மரத்திற்கு மரம்

## ஜோகூர்பாருவில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம்

*(தீபா ராமன்)*

*ஜோகூர்பாரு,ஜன. 19-*

மரத்திற்கு மரம் எனும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கம் நேற்று முன்தினம் ஜோகூர்பாருவில் தொடங்கியது. தெனாகா நேஷனல் பெர்ஹாட், ஜோகூர்பாரு மாநகர் மன்றம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

உலகம் முழுமையும் தற்போது வெப்பத்தின் தாக்கம் அதிகரித்திருக்கின்றது. நம் நாட்டில் இதனை குறைப்பதற்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

அந்த அடிப்படையில்ஜோகூர்பாருவில் மரத்திற்கு மரம் எனும் சுற்றுச் சூழல் இயக்கம் தொடங்கப்பட்டது. மலேசிய சுற்றுச்சூழல் பாதுதகாப்பு அமைப்பின் ஒத்துழைப்பும் இதற்கு கிடைத்திருக்கின்றது. இந்த இயக்



கத்தை முன்னிட்டு 600 வகையான மரக்கன்றுகள் முவா பாக்காட் பெர்மாஸ், பெர்மாஸ் ஜெயாவில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் நடப்பட்டன.

ஜோகூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ முகமது காலிட் நோர்டின் சிறப்பு வருகை தந்தார். சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். ஆண்டுக்கு 10 ஆயிரம் மரக்கன்றுகள் நட வேண்டுமென்பது ஜோகூர் மாநகர் மன்றத்தின் இலக்கு என்று டத்தோ பண்டார் ஏ. ரஹீம் நின் கூறினார்.

இந்த மரத்திற்கு மரம் எனும் இயக்கம் எங்களுடைய இந்த இலக்கை அடையும் நடவடிக்கைக்கு பேருதவியாக இருக்க முடியும் என்று அவர் சொன்னார்.

காட்டு மரக்கன்றுகள், மூலிகை மரக்கன்றுகள், மருத்துவ மரக்கன்றுகள், பழமரக்கன்றுகள் ஆகியவை இத்திட்டத்தில் நடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

2007ஆம் ஆண்டு தொடங்கி ஊராட்சி மன்றங்கள் அடிப்படையின் மரக்கன்றுகளை நடும் திட்டம் தொடங்கப்பட்டது.

இதுவரை ஜோகூர்பாரு மாநகர் மன்ற அதிகாரத்திற்கு உட்பட் பகுதிகளில் 2 லட்சத்து 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். பொதுமக்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தங்கள் விருப்பம் போல மரங்களை வெட்டக்கூடாது என்று அவர் நினைவுறுத்தினார்.

ஜோகூர்பாரு மாநகர் மன்றத்தின் அதிகாரத்திற்கு உப்பட்ட பகுதிகளில் மரங்களை வெட்ட வேண்டுமானால் அதற்கு முன் கூட்டியே அனுமதி பெற்றாக வேண்டும் என்று அவர் சொன்னார்.



Powered by: iSENTIA